பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
29 09 2025 7 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு.நரேந்திர மோடி, குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணனை சந்தித்துப் பேசியுள்ளார்.
- பீஹார் மாநிலத்தில் இருந்து 7 புதிய ரயில் சேவைகளை ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று தொடங்கி வைக்கிறார்.
- கடல்சார் துறையில் 66 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தகங்கள் கையெழுத்தாகியுள்ளன.
- நேபாள முன்னாள் பிரதமர் திரு.கே.பி. சர்மா ஒலி, நாட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது.
- ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி கோப்பையை வென்ற இந்திய அணிக்கு 21 கோடி ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு.நரேந்திர மோடி, குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணனை சந்தித்துப் பேசியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், புதுதில்லியில் உள்ள குடியரசுத் துணைத்தலைவரின் இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, பல்வேறு அம்சங்கள் குறித்து, குடியரசு துணைத்தலைவருடன் ஆக்கப்பூர்வமான ஆலோசனை நடத்தியிருப்பதாக கூறியுள்ளார்.

<<<<>>>>

பீஹார் மாநிலத்தில் இருந்து இன்று 7 புதிய ரயில் சேவைகளை ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தொடங்கி வைக்கிறார்.

பட்னா ரயில் நிலையத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் 3 அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள் மற்றும் 4 பயணியர் ரயில் சேவைகளை தொடங்கி வைக்க இருப்பதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*இதன்படி முசாஃபர்பூர்-ஹைதராபாத், Darbhanga-Madar, Chhapra-Delhi Ananth Vihar ரயில் நிலையங்களுக்கு இடையே அம்ரித் பாரத் ரயில்கள் இயக்கப்பட உள்ளது.*

*அதேபோன்று Patna - Buxar, Danapur - Jhajha, Nawada-Patna மற்றும் Islampur-Patna இடையே 4 பயணியர் ரயில் சேவைகள் இயக்கப்பட உள்ளதாக அவர் கூறியுள்ளார்.*

*இந்தப் புதிய ரயில் சேவைகள் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு பேரூதவியாக இருக்கும் என்று திரு. அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டுள்ளார்.*

**<<<<>>>>**

*நாட்டின் கடல்சார் மற்றும் கப்பல் கட்டும் தொழிலில் சுமார் 66 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான 27 புரிந்துணர்வு ஒப்பந்தகங்கள் கையெழுத்தாகியுள்ளது.*

*இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பாரதீப் மற்றும் விசாகப்பட்டினம் துறைமுகங்களில் 21 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஒடிசா மாநிலம் Bahuda-வில் 6 ஆயிரத்து 700 கோடி ரூபாய் முதலீட்டில் புதிய துறைமுகம் அமைக்கவும் ஒப்பந்தம் கையெழுத்ததாகியுள்ளது.*

*பீஹார் மாநிலம் பட்னாவில் 908 கோடி ரூபாய் செலவில் வாட்டர் மெட்ரோ திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.*

*இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்தியாவின் கடல்சார் துறை அடைந்து வரும் வளர்ச்சிக்கு உதாரமணமாக அமைந்துள்ளன என்று மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் திரு. சர்பானந்த சோனோ கூறியுள்ளார்.*

*இந்த திட்டங்களின் வாயிலாக நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 25 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

**<<<<>>>>**

*சேவை இரு வார விழாவின் ஒரு பகுதியாக, 100 நாடுகளில் வளர்ச்சியடைந்த இந்தியா ஓட்டம் நடத்தப்பட்டுள்ளது.*

*மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை, வெளியுறவுத்துறையுடன் இணைந்து, இந்த ஓட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது.*

*நாட்டின் வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை ஊக்குவிப்பதுடன், இந்தியாவின் வளர்ச்சியை, உலக நாடுகளுக்கு எடுத்துரைப்பதே இதன் நோக்கம் ஆகும்.*

*மெல்போர்ன், பெய்ஜிங், டோக்கியோ, கோலாலாம்பூர், பாங்காக், சியோல், ரியாத், நைரோபி உள்ளிட்ட நகரங்களில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்களுக்கு அருகே, மூன்று முதல் ஐந்து கிலோமீட்டர் தொலைவுக்கு நடத்தப்பட்ட இந்த ஓட்டத்தில், வெளிநாடுவாழ் இந்தியர்கள் உட்பட ஏராளமானோர் உற்சாகத்துடன் பங்கேற்றதாக, மத்திய இளைஞர் நலத்துறை தெரிவித்துள்ளது.*

**<<<<>>>>**

*வளரிளம் பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான, NAVYA திட்டம், முதற்கட்டமாக, 9 மாநிலங்களுக்கு உட்பட்ட 9 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*இத்திட்டத்தின்கீழ் 16 வயது முதல் 18 வயது வரையிலான இளம் பெண்களுக்கு டிஜிட்டல் மார்கெட்டிங், இணைய பாதுகாப்பு உள்ளிட்ட வளர்ந்து வரும் துறைகளில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.*

*மேலும் சுகாதாரம், நெருக்கடி மேலாண்மை, தகவல் தொடர்பு திறன் மேம்பாடு, பணியிடப் பாதுகாப்பு போன்ற துறைகளிலும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.*

*இந்தத் திட்டம் வளரிளம் பெண்களை சுயசார்பு அடையச் செய்வதில் ஒரு மைல்கல்லாக அமையும் என்று மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி சாவித்திரி தாக்கூர் தெரிவித்துள்ளார்.*

**<<<<>>>>**

*நேபாள முன்னாள் பிரதமர் திரு.கே.பி. சர்மா ஒலி, நாட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது.*

*காத்மாண்டுவில் நேற்று நடைபெற்ற இடைக்கால அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*அந்நாட்டில் சமூக ஊடகங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தை ஒடுக்க முயன்றதாக திரு. சர்மா ஒலி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.*

*இதேபோன்று அந்நாட்டு முன்னாள் உள்துறை அமைச்சர் திரு. ரமேஷ் லெகாக் மற்றும் உள்துறையின் முன்னாள் செயலாளர், தேசிய புலனாய்வு அமைப்பின் முன்னாள் தலைவர் உள்ளிட்ட மேலும் 4 பேரும் நாட்டைவிட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது.*

**<<<<>>>>**

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தம் காரணமாக, பல்வேறு உணவுப் பொருட்களின் விலை குறைந்துள்ளதால், மத்திய அரசுக்கு தில்லி மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.*

*மக்கனா எனப்படும் தாமரை விதையிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களின் மீதான வரி 12 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டிருப்பது, உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில், அதிகளவில் போட்டியிட வழிவகை ஏற்பட்டிருப்பதை பொதுமக்களும், வியாபாரிகளும் வரவேற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*அதேபோன்று, பழச்சாறுகள், ஜாம் மற்றும் ஊறுகாய் மீதான வரியும் 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதால், இவற்றின் விற்பனை அதிகரித்திருப்பது, விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு பயனளிப்பதாக அவர் கூறுகிறார்.*

**<<<<>>>>**

*லடாக் யூனியன் பிரதேசத்திற்கு மாநில அந்தஸ்துகோரி நடைபெற்ற போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறை காரணமாக, லே நகரில் ஆறாவது நாளாக ஊரடங்கு நீடிக்கிறது.*

*அந்த யூனியன் பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்தி, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து, துணை நிலை ஆளுனர் திரு.கவிந்தர் குப்தா, உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.*

*தற்போதைய பாதுகாப்பு நிலவரம் குறித்தும், தொடர்ந்து விழிப்புடன் பணியற்றி, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு, இந்தக் கூட்டத்தின்போது, துணைநிலை ஆளுனர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.*

**<<<<>>>>**

*கேரள ஆளுனர் மாளிகையின் செயல்பாடுகளை, மக்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில், ராஜஹம்ஸ் வளாக இதழ் வெளியிடப்பட்டுள்ளது.*

திருவனந்தபுரத்தில் உள்ள ஆளுனர் மாளிகையில் ஆளுனர் திரு.ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அம்மாநில முதலமைச்சர் திரு.பினராயிவிஜயன் இந்த இதழை வெளியிட, அதன் முதல் பிரதியை, திருவனந்தபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சசி தரூர் பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் பேசிய திரு.பினராயி விஜயன், இந்த இதழ், வரலாற்று ரீதியான மதிப்புமிக்க ஆவணமாகத் திகழும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தில் துர்காபூஜை பண்டிகை, களைகட்டியுள்ளது.

ஐந்து நாட்கள் நடைபெறும் இந்தப் பண்டிகை மகாசாத்தி கொண்டாட்டங்களுடன் நேற்று தொடங்கியதையடுத்து, மக்கள் வீடுகளிலும், பொது இடங்களிலும் துர்கா தேவியின் சிலைகளை வைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.

கொல்கத்தா நகர் முழுவதும், துர்கா பூஜை பந்தல்கள் அமைக்கப்பட்டு, ஒளி வெள்ளமாகக் காட்சியளிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

குஜராத்தின் சவுராஷ்டிரா மற்றும் கட்ச் பகுதிகளில், இன்று அதிகனமழை பெய்யக்கூடுமென, வானிலை மையம் தெரிவித்துள்ளது.

குஜராத் மாநிலத்தின் பிற பகுதிகளிலும், கோவா மற்றும் மகாராஷ்டிராவிலும், அடுத்த இரு நாட்களுக்கு கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

சட்டிஸ்கர், நாகாலாந்து, மனிப்பூர், மிசோரம், திரிபுரா மாநிலங்கள் மற்றும் அந்தமான்-நிகோபார் தீவுகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரப் பிரதேசம், பீகார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில், சூறாவளிக் காற்றுடன் கூடிய மழை பெய்யுமெனவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி 9வது முறையாக கோப்பையை வென்ற இந்திய அணிக்கு 21 கோடி ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.*

*துபாயில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் டாசில் வென்ற இந்தியா பந்துவீச தீர்மானித்ததையடுத்து, முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 19 புள்ளி ஒரு ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 146 ரன் எடுத்தது.*

*பின்னர் களமிறங்கிய இந்திய அணி 19 புள்ளி 4 ஓவரில் 5 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 150 ரன் எடுத்தது.*

*இதன் மூலம் இந்திய அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.*

*அதிகபட்சமாக திலக் வர்மா 69 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.*

*இந்திய அணியின் இந்த வெற்றிக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

*ஆசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீஹரி நடராஜ் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளார்.*

*அகமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில், 200 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் மற்றும் 50 மீட்டர் Batch Stroke பிரிவுகளில் அவர் இப்பதக்கத்தை வென்றார்.*

*மகளிர் 200 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் பிரிவில் இந்தியாவின் Dhinidhi Desinghu மூன்றாவதாக வந்து வெண்கலப் பதக்கத்தை வென்றார்.*

**<<<<>>>>**

*தேசிய ஓபன் தடகள சாம்பியன் போட்டியின் 100 மீட்டர் ஓட்டப் பிரிவில் Manikanta Hoblidhar தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.*

***ராஞ்சியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் அவர் பந்தய தொலைவை 10 புள்ளி ஒன்று ஒன்பது வினாடிகளில் கடந்து தமது முந்தைய சாதனையை முறியடித்ததன் மூலம், இந்தியாவின் இரண்டாவது அதிவேக ஒட்டக்காரர் என்ற சிறப்பை பெற்றுள்ளார்.***

***மகளிர் 100 மீட்டர் பிரிவில் சினேகா தங்கப்பதக்கம் வென்றார்.***

**<<<<>>>>**